**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C.No.34/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW3 | Examined as | : PW3 |
| Name | : அஜீத் | Defence | : |
| Father Name | : செல்லதுரை | Court | : |
| Village | : 92, கீழையூர். | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 28 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 21.08.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்படி முகவரியில் வசித்து எலட்ரீசின் வேலை செய்து வருகிறேன். கடந்த 09.03.2017 அன்று நான் தருமகுளத்தில் உள்ள VMS திருமண மண்டபத்தில் நடந்த திருமணத்திற்கு சென்று, பின்னர் திருமண மண்டபத்திற்கு வெளியே நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது வழக்கு விபத்தில் இறந்த நாகராஜன் என்பவர் அவரது TVS XL வாகனத்தில் கருவியிலிருந்து பூம்புகார் செல்லும் சாலையில் VMS திருமண் மண்டபத்திற்கு அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து வளைவில் திரும்பும் போது ஆஜர் எதிரி அதே திசையில் நாகராஜன் ஓட்டி வந்த வாகனத்திற்கு பின்னால் Honda இருசக்கர வாகனத்தில் வந்து நாகராஜன் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தினார். அந்த விபத்தில் நாகராஜன் கீழே விழுந்துவிட்டார். அவரை நாங்கள் தூக்கி உட்காரவைத்தபோது அவருக்கு பின் மண்டையில் அடிப்பட்டிருந்தது. அவரது மூக்கு மற்றும் காது வழியாக இரத்தம் வந்தது. உடனே அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்.

அவரை மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மறுநாள் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கூறினார்கள். இந்த விபத்துக்கு காரணம் ஆஜர் எதிரிதான். விபத்தில் இறந்த நாகராஜன் என்பவர் இன்டிகேட்டர் போட்டுவிட்டதான் வளைவில் திரும்பினார்.

ஆஜர் எதிரிதான் கவனக்குறைவாக வந்து விபத்தினை ஏற்படுத்தினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**